# கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : மரு. வி. ஜெயசந்திர பானுரெட்டி., இ.ஆ.ப.,

**ந.க.எண்:14573/2016/கே2,** **நாள்: 09.03.2022.**

பொருள் : பணியமைப்பு - கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - கிருஷ்ணகிரி மாவட்டம் - இளநிலை உதவியாளர் - மகேந்திரன் (திரு) ஜி - 04.02.2019 பிற்பகல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை :
1. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.எண்.14573/2016/கே2, நாள்:04.02.2019.
2. அரசாணை (நிலை) எண.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்:26.02.2020.
3. அரசு இணைச்செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ3)துறை, சென்னை கடித எண்.6895/இ3/ 2021-5, நாள்:14.12.2021.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.18355/2021/டி2, நாள்:18.12.2021.
5. தொடர்புடைய ஆவணங்கள்

----000----

**ஆணை :-**

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், மத்தூர் ஊராட்சி ஒன்றியம், வாலிப்பட்டி ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து கடந்த 29.04.2016 அன்று பணியிடைக்காலமான (லேட்)ஜி.கோமதி என்பவரின் வாரிசுதாரர் திரு.ஜி.மகேந்திரன் என்பவருக்கு பார்வை (1)-இன்படி கருணை அடிப்படையில் பருகூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணியிடம் வழங்கப்பட்டு 04.02.2019 பிற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை (2)-இல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை விதித்தளர்வு தேவையில்லாத இனங்களுக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) **(Appointing Authority)** என்ற நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலரான மாவட்ட ஆட்சித்தலைவர் நிலையில் **(One level higher than the appointing authority)** பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, **திரு.ஜி.மகேந்திரன், இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 04.02.2019 பிற்பகல் முதல் பணிவரன்முறை** செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

(...2..)

D:\K2 - 1\Compassionate Ground Appointment 2019\14573-2016-K2 Mahendiran.docx

மேற்படி விவரம் தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கிருஷ்ணகிரி.

பெறுநர்

**திரு. ஜி. மகேந்திரன்,**
**இளநிலை உதவியாளர்,**
**ஊராட்சி ஒன்றியம், பருகூர்.**
**(வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)/(கிஊ), பருகூர் மூலமாக)**

<u>நகல் :</u> கே2 இருப்பு கோப்பிற்கு